# DIRECTORATE OF COLLEGIATE EDUCATION

பெறப்பட்டது
7 SEP 2015
கோவை மண்டலம்

| From | To |
|---|---|
| Dr.(Thiru) M.Devadass,<br>M.Sc., M.Phil., Ph.d., F.Pb.S.,<br>Director of Collegiate Education (F.A.C),<br>Chennai – 600 006. | All Regional Joint Directors of<br>Collegiate Education. |

R.C. No.29467/M3/2015, Dated: 29.08.2015

004462

Sir/Madam,

Sub: Collegiate Education - Tuition fee waived to differently abled category students – Reimbursement - requested – Regarding.

Ref: Government Letter No.13992/A2/2015-1, Higher Education, dated:27.07.2015.

*****

I enclose herewith a copy of the Government letter and its enclosure and I request you to send relevant information to this office, so as to enable to send the information to the Government intime.

**"This may be treated as most urgent".**

for Director of Collegiate Education

Encl: As above.

25/8/15

ந.க எண் : 4462/அ3/2015 நாள்: -09-2015

Higher Education (A2) Department
Secretariat, Chennai-9.

Letter No.13992/A2/2015-1, dated 27.7.2015

029467

From
Tmt. A.Suguna, M.A., B.L.,
Deputy Secretary to Government.

07 AUG 2015

To
The Director of Technical Education, Chennai-25. (w.e)
The Director of Collegiate Education, Chennai-6. (w.e)
The Registrar of all Universities under the aegis of
Higher Education Department. (w.e)

Sir / Madam,

Sub: Tuition fee waived to differently abled category students – Reimbursement – Regarding.

Ref: 1. The note from Law (Ls) Department, C.No.13621/LS/2014.
2. G.O. (Ms) No.30, WADP (DAP-2) Department, dated 28.6.2010.

-----

I am directed to enclose a copy of the reference 2nd cited wherein orders were issued for exempting the Differently Abled students studying in Government, Government Aided Colleges including Law Colleges from payment of special fees.

2. I am to request you to furnish the details of reimbursement of Tuition fee waived for differently Abled category students.

Yours faithfully,

K. V. Radha 27.7.15
for Deputy Secretary to Government.

Copy to:
Under Secretary to Government (Universities),
Higher Education Department, Chennai-9.
Under Secretary to Government (CE),
Higher Education Department, Chennai-9.
Under Secretary to Government (TE),
Higher Education Department, Chennai-9.
Under Secretary to Government (Buildings),
Higher Education Department, Chennai-9.

சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலன் – நிதிநிலை அறிக்கை 2010–2011 – அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் மாற்றுத் திறனாளி மாணவ/மாணவிகளுக்கு தனிக் கட்டணம் (Special Fees) செலுத்துவதிலிருந்து விலக்களித்தல் ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நலத் (மா.தி.ந. 2) துறை

அரசாணை(நிலை) எண். 30

நாள்: 28–06– 2010
ஆனி 14, திருவள்ளுவர் ஆண்டு 2041
படிக்க:

1. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித எண். 10386/சி.பா. 1/2010, நாள் 19.3.2010.

-------

ஆணை:

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் 2010–2011ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் ஏனையவற்றுடன் பின்வரும் அறிவிப்பு செய்யப்பட்டது.

" மாற்றுத் திறனுடையோர் உயர்கல்வி பயில்வதற்கு ஏதுவாகக் கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்த இந்த அரசு வரும் கல்வி ஆண்டிலிருந்து தனிக் கட்டணம் (Special Fees) செலுத்துவதிலிருந்தும் விலக்கு அளிக்கும்".

2. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தற்போது, அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பட்டப்படிப்பு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவச கல்வி அளிக்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது எனவும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் மற்றும் உயர் கல்வித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களில் பயிலும், மாற்றுத் திறனாளி மாணவ/ மாணவியர்களுக்கு கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டு அரசு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன என்றும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர் கல்வி நிலையங்களான மருத்துவ கல்லூரிகள் மற்றும் வேளாண்மைக் கல்லூரிகளில் பயிலும் மாற்றுத் திறனாளிகளுக்கு கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து ஏற்கனவே முழு விலக்களிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், மாற்றுத் திறனாளிகள், தமது கல்லூரிகளில் கல்விக் கட்டணம் தவிர, சிறப்புக் கட்டணம், ஆய்வுக்கூடக் கட்டணம், தேர்வுக் கட்டணம் போன்ற இதர கட்டணங்கள் செலுத்த வேண்டியுள்ளது எனவும், மாற்றுத் திறனாளிகள் பெரும்பாலோர் வசதியற்ற பொருளாதார சூழ்நிலைகளில் இருப்பதாலும், அவர்கள் உயர்கல்வி தொடர இயலாத நிலை ஏற்படுவதாகவும், உயர்கல்வி பயிலாதது மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தை வெகுவாக பாதிக்கின்றது எனவும், மாற்றுத் திறனாளிகள் இடையூறு இல்லாமல் உயர்கல்வி தொடர ஏதுவாக, கல்விக் கட்டணத்திலிருந்து (Tution fees) விலக்கு அளித்தது போல், தனிக் கட்டணத்திற்கும் (Special

fees) அரசு விலக்கு அளிக்க வேண்டியது அவசியம் என்றும் தெரிவித்துள்ளார். எனவே, அரசு மற்றும் அரசு உதவி பெறும் மருத்துவக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், சட்டக் கல்லூரிகள், வேளாண் கல்லூரிகள், கல்வியியல் கல்லூரிகள், அனைத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பட்டப் படிப்பு மற்றும் பட்டமேற்படிப்பு ஆகிய உயர் கல்வி பயிலும் அனைத்து மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியர்களுக்கு தனிக் கட்டணம் (Special fees) செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்து ஆணை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

4. அரசு, தீவிர பரிசீலனைக்குப் பின்னர், மேலே பத்தி 3இல் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை ஏற்று, அரசு மற்றும் அரசு உதவி பெறும் மருத்துவக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், சட்டக் கல்லூரிகள், வேளாண் கல்லூரிகள், கல்வியியல் கல்லூரிகள், அனைத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பட்டப் படிப்பு மற்றும் பட்டமேற்படிப்பு ஆகிய உயர் கல்வி பயிலும் அனைத்து மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியர்களுக்கும் தனிக் கட்டணம் (Special fees) செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்து அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா. எண்.Fin(WDAP)/07/DS/GR/2010 நாள் 28.6.2010ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சோ.கு. ஜவஹர்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை-9.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-5/9/35.
தலைமைக் கணக்காயர், சென்னை-18/35.
தலைமைக் கணக்காயர், சென்னை-18/35 (பெயரில்)

நகல்:

நிதி (மாற்றுத் திறனாளிகள் நல)த் துறை, சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர் (திரு. எஸ்.கே.பி) , சென்னை-9.
அரசு செயலாளர் (மாற்றுத் திறனாளிகள் நலத் துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை-9.
மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் அனைத்துப் பிரிவுகள்.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.